செய்தி வெளியீடு எண்: 290/2018 நாள் : 21.05.2018

**புதூர் நாடு மலைகிராமங்களை இணைத்து இப்பகுதியின் வளர்ச்சிக்காக தனி ஊராட்சி ஒன்றியமாக உருவாக்கிட அரசுக்கு கோரிக்கை வைக்கப்படும்!**

**புதூர்நாடு மலைகிராம வளர்ச்சிக்காக ரூ 92 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சிப்பணி திட்டங்களை நிறைவேற்றிட வனத்துறையிடம் இருந்து அனுமதி பெற்று நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கப்படும்!!**

**வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் புதூர் நாடு மற்றும் நெல்லி வாசல் நாடு வரையிலான சாலை போடும் பணிக்கு பூமி பூஜையினை போட்டு மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் பணியினை தொடங்கி வைத்தார்கள்!!!**

வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் திருப்பத்தூர் ஒன்றியம் புதூர் நாடு முதல் நெல்லிவாசல்நாடு வரையிலான 14 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ4.73கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள புதிய சாலை பணிக்கான பூமிபூஜையினை போட்டு மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் சாலை பணிகளை தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்ச்சிக்கு மண்டல முதன்மை வன பாதுகாவலர் திரு.சேவாசிங். இ.வ.ப, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.நல்லதம்பி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் பேசியதாவது.

தமிழக மக்களின் நீங்காத இடம் பிடித்த மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆசியோடு இந்த சாலை அமைக்கும் பூமி பூஜை பணி நடைப்பெறுகிறது. இந்த மலைகிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புங்கம்பட்டு நாடு முதல் நெல்லி வாசல் நாடு வரையிலான 14 கி.மீ சாலைப்பணி ரூ.4.73 கோடி செலவில் போடப்படுகிறது. மலைகிராமங்களில் எந்த ஒரு பணியினை மேற்கொள்ள வனத்துறையின் அனுமதியின்றி செய்ய இயலாது. இப்பணியினை நிறைவேற்றுவதிலும் இதே பிரச்சனைதான் இருந்து வந்தது. ஆனால் மக்களின் தொடர் பிரச்சனையை கருத்தில் கொண்டு பல்வேறு சட்ட சிக்கல்களையும் களைந்து அரசிடமிருந்து இந்த பணிக்கு அனுமதி பெற்று நிறைவேற்றப்படுகிறது. இந்த பணிக்கு வனத்துறையின் நிதியுதவிதான் பயன்படுத்தப்பட வேண்டும் ஆனால் மக்களின் பிரச்சனையை உடனே தீர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழக அரசின் உள்ளாட்சி நிதியினை பயன்படுத்தி கொள்ள நடவடிக்கை எடுத்து நிறைவேற்றப்படுகிறது. இந்த சாலை பணியானது தொடர்ந்து அடுத்த 10 ஆண்டுகளுக்கு பயன்பெரும் வகையில் தரமான முறையில் வனத்துறையின் கண்காணிப்பில் அமைக்கப்படும்.

மேலும் இப்பகுதியின் வளர்ச்சிபணிகளுக்கு ரூ.92 கோடி மதிப்பீட்டில் வனத்துறையின் மூலம் ஏற்கெனவே திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு நிலுவையில் இருந்து வரும் பள்ளி கட்டிடங்கள் பெண்கள் தங்கும் விடுதி, சாலை வசதி போன்ற பணிகளுக்கு உடனடியாக அனுமதியினை பெற்று நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கவும், இந்த மலை பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான நெல்லிவாசல் நாடு முதல் சிங்காரப்பேட்டை வரையிலான சாலை. மற்றும் சேர்க்கானூர் முதல் கொடும்பாபள்ளி வரையிலான சாலை வசதிகளை ஏற்படுத்திட மத்திய அரசின் தென்பகுதி தலைமை வனத்துறையிடம் இருந்து விரைவாக அனுமதி பெற்று நிறைவேற்றிடவும் முதன்மை வன பாதுகாவலர் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து இப்பகுதியின் மலைவாழ் மக்களின் வளர்ச்சிக்காக புதூர்

நாடு மலை கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளை இணைத்து ஒரு புதிய ஊராட்சி ஒன்றியமாக உருவாக்கிட அனைத்து விதமான திட்ட அறிக்கையினை அரசுக்கு அனுப்பிவைத்து நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது போடப்படும் சாலையினால் சுமார் 32 கிராமங்களை சார்ந்த 27ஆயிரம் மக்கள் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுபோன்று மலைகிராம மக்களின் வளர்ச்சி பணிக்காக தொடர்ந்து அம்மாவின் அரசு உறுதுணையாக இருக்கும் என்று மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் நிகழ்ச்சியில் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது.

இந்த புதூர்நாடு மலைவாழ் மக்களின் நீண்ட நாள் பிரச்சனையான இந்த பழுதடைந்த சாலையை தார் சாலையாக அமைக்கும் பணி தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த பகுதி வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது ஆகவே இதை நிறைவேற்றுவதில் பல்வேறு சட்ட பிரச்சனை இருந்து வந்தது. ஆனால் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் வன உயிரின சட்டத்தில் மலைவாழ் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றிட அரசுக்கு கடிதம் அனுப்பி பல்வேறு பிரச்சனைகளை தாண்டி நிறைவேற்றப்படுகிறது. இருந்தபோதிலும் வனத்துறையின் நிதியைபெற்று சாலை அமைக்க முடியவில்லை. தொடர்ந்து தமிழக அரசின் பரிந்துறையின் பெயரில் உள்ளாட்சி துறையின் பெருமளவு நிதி இந்த சாலைபணிக்கு பயன்படுத்தி அமைக்கப்படுகிறது. அடுத்த 10 ஆண்டுதளுக்கு தாங்கும் விதமாக தரமான சாலையாக அமைக்கப்படும். ஏதிர் வரும் 6 மாதங்களுக்குள்ளாக இப்பணி முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இந்த மலைபகுதிகளில் உள்ளாட்சி துறையின் மூலம் 432 நபர்களுக்கு பாரத பிரதமரின் அனைவருக்கும் வீடுவழங்கும் திட்டம் மூலம் வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. மேலும் சிறிய பாலங்கள் தடுப்பணைகள் சிறிய சாலைவசதிகள் என ரூ13 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மலைவாழ் மக்களின் வாழ்க்கை பொருளாதாரத்தை மேலும் உயர்த்திட மாவட்ட தொழில் மையத்தின் வாயிலாக சுய தொழில் தொடங்க அனைத்து விதமான உதவிகளையும் அரசு அளித்துள்ளது இவற்றில் எல்ல விதமான சந்தேகங்களையும் நிவர்த்தி செய்து மக்களுக்கு தொழில் கடனுதவிகளை வழங்கிட தேவையான ஆலோசனைகளை இத்துறைக்கு வழங்கியுள்ளோம். இவற்றை எல்லாம் மலைவாழ் மக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பெ.பெரியசாமி, மாவட்ட வன அலுவலர் திரு.முருகன் இ.வ.ப, கூடுதல் வன பாதுகாவலர் திரு.முகமது ரபிக், வனத்துறை பொறியாளர் திரு.சிவமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கே.ஜி.ரமேஷ், ஊரக வளர்ச்சி செயற் பொறியாளர் திரு.ராஜவேலு, துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.தேவபார்த்தசாரதி, சாலைப்பணி ஒப்பந்ததாரர் திரு.குமரேசன் மற்றும் வனத்துறை ஊரக வளர்ச்சி அலுவலர்கள் பொதுமக்கள் பலர் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொ1டர்பு அலுவலகம் வேலூர்-9.